# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1993 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் (திருத்தச்) சட்டம்

---

*[1993, ஒக்றோபர் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1993, ஒக்றோபர் மாதம் 22 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 தபாற் செலவு : ரூபா 1.00

**1993 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் (திருத்தச்) சட்டம்.**

**[1993, ஒக்றோபர் மாதம் 20 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]**

ச. வ.—ஓ. 25/92

4076

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்.**

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்திற்கான விரிவுப்பெயர் இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய விரிவுப்பெயர் இடப்படுகின்றது :—

"தேசிய விளையாட்டுப் பேரவை, மாவட்ட விளையாட்டுக் குழுக்கள், விளையாட்டுப் பழக்குநர்களினதும், தொழில்நுட்ப அலுவலர்களினதும் தேசிய கழகம், இலங்கை ஒலிம்பிக் குழு என்பவற்றைத் தாபிப்பதற்கும், விளையாட்டு நிதியமொன்றைத் தாபிப்பதற்கும், தேசிய விளையாட்டுக் கழகங்களைப் பதிவுசெய்து அவற்றை மேற்பார்வை செய்வதற்கும், விளையாட்டுக்களுக்கான பாடசாலைகளைத் தாபிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவைத் திருத்துதல்.**

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஆஆ) விளையாட்டுப் பழக்குநர்களினதும் தொழில்நுட்ப அலுவலர்களினதும் ஒரு தேசியக் கழகம் ; ".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் I ஆம் பாகத்திற்கான தலைப்பைத் திருத்துதல்.**

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் I ஆம் பாகம், அப் பாகத்திற்கான தலைப்பில், "மாவட்ட விளையாட்டுக் குழுக்கள், தேசிய ஒலிம்பிக் குழு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மாவட்ட விளையாட்டுக் குழுக்கள், விளையாட்டுப் பழக்குநர்களினதும் தொழில்நுட்ப அலுவலர்களினதும் ஒரு தேசிய கழகம், அத்துடன் ஒரு தேசிய ஒலிம்பிக் குழு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தில் 17அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.**

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 17அ, என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

**"விளையாட்டுப் பழக்குநர்களினதும் தொழில்நுட்ப அலுவலர்களினதும் தேசிய கழகத்தை தாபித்தல்.**

17அ. (1) "இலங்கையின் விளையாட்டுப் பழக்குநர்களினதும் தொழிநுட்ப அலுவலர்களினதும் தேசியக் கழகம்" என அழைக்கப்படவேண்டிய கழகம் ஒன்று தாபிக்கப்படலாம்.

(2) விளையாட்டுப் பழக்குநர்களினதும் தொழில் நுட்ப அலுவலர்களினதும் தேசியக் கழகத்தின் அமைப்பு, தத்துவங்கள், பணிகள் அத்துடன் கடமைகள் என்பன ஒழுங்குவிதி மூலம் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :—

"(2) அத்தகைய குழு பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) 3ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்படும் விளையாட்டுக்கள் பணிப்பாளர், இவர் பதவி வழி உறுப்பினர் ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) இலங்கையின் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் உறுப்பினர்கள், அத்தகையவர்கள் எவரேனுமிருப்பின், இவர்கள் (இ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்டவர்களாகவிருத்தாலன்றி, பதவிவழியுறுப்பினர்களாகவும் வாக்களிக்காத உறுப்பினர்களாகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) இச்சட்டத்தின் இனிமேல்வரும் ஏற்பாடுகளுக்கிணங்கப் பதிவு செய்யப்பட்ட தேசிய விளையாட்டுக் கழகம் ஒவ்வொன்றினதும் பிரதிநிதிகளான இருவர் ; ஆயின் எப்படியிருப்பினும், அத்தகைய தேசியக் கழகம் ஒவ்வொன்றும், அதன் அந்தந்த சர்வதேச சம்மேளனத்துடன் இணைக்கப்பட்டதாக அல்லது அதன் ஓர் உறுப்பினராகவும் அது பிரதிநிதித்துவப்படுத்தும் விளையாட்டுக்கள், ஒலிம்பிக் விளையாட்டுக்கள் நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

குழுவானது, பதிவுபெற்ற வேறு தேசிய விளையாட்டுக் கழகங்கள் போராட்களை அல்லது ஒலிம்பிக் இயக்கத்துக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ள அல்லது ஆற்றவல்ல ஆட்களை ஒத்துத் தேர்ந்தெடுக்கலாம் ; ஆயின் அவ்வாறு ஒத்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், குழுவின் வாக்களிக்கும் பெரும்பான்மையை ஆக்கும் விதமாக இருத்தலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 18அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு, இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 18அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"குழு உறுப்பினர்களின் பதவிக் காலம்.

18அ. விளையாட்டுக்கள் பணிப்பாளர் தவிர்ந்த அத்தகைய குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும் நான்கு வருடகாலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு, பின்வரும் பந்தியை அப்பிரிவின் இறுதியில் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(உ) 18 ஆம் பிரிவின் 2(அ) என்னும் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்ட உறுப்பினராக இல்லாது, அடுத்தடுத்து இரு பதவிக்காலங்களுக்கு அத்தகைய குழுவில் சேவை புரிந்தவரெனின்,".

9. பின்வரும் புதிய பிரிவு முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 21அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:— முதன்மைச் சட்டவாக்கத்தில் 21அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"கணக்குகளும் கணக்காய்வும்.

21அ. (1) அத்தியாயம் III இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு தேசிய விளையாட்டுக் கழகமும், இலங்கைத் தேசிய ஒலிம்பிக் குழுவும் அத்தகைய கழகத்தினதும் குழுவினதும், வரவினதும் செலவினதும் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களினதும் முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) அத்தகைய குழுவும் ஒவ்வோர் அத்தகைய கழகமும் ஒவ்வோர் ஆண்டும் திசெம்பர் 31 ஆந் தேதியன்று உள்ளவாறு அதன் புத்தகங்களை ஐந்தொகைப்படுத்துவித்தல் வேண்டும் என்பதுடன் அடுத்த மார்ச் மாதம் முப்பத்தோராம் தேதிக்கு முன்னர், விடயத்துக்கேற்ப, முதலில் குறிப்பிடப்பட்ட தேதிவரை அத்தகைய குழுவினதும் அத்தகைய ஒவ்வொரு கழகத்தினதும் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் ஒரு பொழிப்பைக் கொண்டுள்ள ஓர் ஐந்தொகையையும் தயாரிக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கணக்காய்வாளர் தலைமையதிபதி அத்தகைய குழுவினதும் அத்தகைய ஒவ்வொரு கழகத்தினதும் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் வேண்டும்.".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(ஆஆ) ஏதேனும் விளையாட்டுக்கு அல்லது விளையாட்டு நிகழ்ச்சிக்கு ஆதரவு அளிப்பதற்காக, அரசாங்கத்தினால், ஒரு பகிரங்கக் கூட்டுத் தாபனத்தினால் அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமாக்கப்பட்ட தொழில் பொறுப்பு முயற்சியினால் செலுத்தப்படற்பாலதான எல்லாப் பணத்தொகைகளும்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு, அப்பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(4) ஏதேனும் தேசிய விளையாட்டுக் கழகத்தைக் கலைப்பதற்கென அல்லது, 32 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் தேசிய விளையாட்டுக் கழகத்தின் பதிவை இடைநிறுத்துவதற்கெனக் கட்டளையிட்டு (1) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளை ஒன்றை அமைச்சர் ஆக்குகின்றவிடத்து, அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், எழுத்துமூலமான அறிவித்தல் மூலம் அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்தின் பதவி தாங்குநரை, அத்தகைய தேசிய விளையாட்டுக் கழகத்தின் (எவையேனும் புத்தகங்களும் ஆவணங்களும் உள்ளடங்கலாக) அசைவுள்ள எல்லா ஆதனங்களையும் விளையாட்டுக்கள் பணிப்பாளரிடம் ஒப்படைக்குமாறு தேவைப்படுத்தலாம். இவ்வுட்பிரிவின்கீழ் அவர்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் ஒரு நீதிவான் முன்னிலையிலான சுருக்க விசாரணையின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐயாயிரம் ரூபா தொகையினதான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு "தேசிய விளையாட்டுக் கழகம் அத்துடன் மாவட்ட விளையாட்டுக் குழுக்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேசிய விளையாட்டுக்கள் பேரவை, விளையாட்டுப் பழக்குநர்களதும் தொழில்நுட்ப அலுவலர்களதும் தேசிய கழகம், அத்துடன் மாவட்ட விளையாட்டுக் குழுக்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு "தேசிய விளையாட்டுக் கழகம்" என்னும் வரைவிலக்கணத்துக்கு நேர்முன்னர் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டம் தவிர்ந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ், மானியம் அல்லது கடன் வகையாக அல்லது வேறு வகையில் அரசாங்கத்தால் முற்றாக அல்லது பகுதியாக ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகளுடன் அல்லது மூலதனத்துடன் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டுள்ள ஏதேனும் கூட்டுத்தாபனம் எனப் பொருள்படும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

14. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.